# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 32 January - 2019 Issue - 1


ஆசிரியர் உரை

## தாவீதின் அழைப்பு

அழைப்பு என்னும் வார்த்தையும் அதன் பொருளும், நமக்குப் புதிதான ஒன்றாக இருக்க முடியாது. ஏனெனில், இப்பூலோக வாழ்வில் நாம் ஏற்பாடு செய்யும் சிறப்பு நிகழ்வுகளுக்குப் பிறரை அழைக்கிறவர்களாகவும், மற்றவர்கள் கொடுக்கும் அழைப்பை ஏற்றுக் கொள்ளு கிறவர்களாகவுமே நாம் நமது சமுதாய வாழ்வை நடத்திக் கொண்டுள்ளோம். ஆயினும், அழைப்புகளில் வித்தியாசம் உண்டு. குடும்பம், சமுதாயம், நிர்வாகம், இயக்கம்,தேசம் சம்பந்தப்பட்டவை என்று பல ரகங்கள் உண்டு. பொதுவாக, இவ்வழைப்புகள் அனைத்தும் பூலோக வாழ்வு சம்பந்தப் பட்டவைகளாகவும், மனிதனின் பூமிக்குரிய வாழ்நாளோடு முடிந்து போகக்கூடியவைகளாகவுமே இருக்கிறது. ஆனால், தேவசாயலில் படைக்கப்பட்ட மனிதன் அழியாத ஆத்துமாவைத் தன்னகத்தே கொண்டிருக்கிறபடியால், அவன் வாழ்வு பூமியோடு முடிந்து போவதில்லை. எப்படியெனில், சரீரம் மண்ணுக்கும், ஆத்மா விண்ணுக்கும் உரியதாகவே தேவனால் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆகவே, மனிதன் இப்பூலோக வாழ்வு சம்பந்தப்பட்ட அழைப்புகளைத் தாண்டி, ஆன்மீக ரீதியான ஓர் அழைப்பில் தன் சிந்தையைச் செலுத்தியாக வேண்டும்.

இதற்கு ஏதுவாக, பேரின்ப வாழ்வை நித்திய காலத்திற்கும் வாக்களிக்கும் ஓர் உன்னத அழைப்பை இரட்சகர் இயேசு இப்படியாகக் கொடுத்திருக்கிறார். வருத்தப்பட்டுப் பாரஞ்

**சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்** என்று (மத். 11:28). மானிடர் எல்லோருக்குமான இப்படிப்பட்ட அழைப்பு மத உலகில் வேறு யாரிடமிருந்தும் வந்ததில்லை. ஆயினும், இவ்வழைப்பின் அழகை, ஆழத்தை, மேன்மையை, இதன் அவசியத்தை எடுத்துரைப்பது இம்மாதத்திற்கான என் நோக்கமல்ல. மாறாக, **அழைப்பு** பற்றிய தாக்கத்தை உங்கள் மனதில் ஏற்படுத்தி அப்படியே வேறொரு அழைப்பை நோக்கி உங்களைக்கூட்டிச்செல்லவே முயற்சிக்கிறேன்.

இந்த **வேறொரு அழைப்பு** பழைய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது. இந்த அழைப்பை விடுப்பவர், பரலோக தேவனை நேசிக்கும் அனைவராலும் அறியப்பட்டிருக்கும் தாவீது. ஆம், ஈசாயின் குமாரனாகிய இந்தத் தாவீதின் அழைப்பு, இயேசு கிறிஸ்துவின் அழைப்பு போன்று நேரிடையான ஒன்று அல்ல. ஆயினும், இது அழைப்பு என்னும் பதத்திற்கு அப்பாற்பட்டதும் அல்ல. அவன் பாடின சங்கீதத்தின் இவ்வரியைப் கவனித்தால் இதைத் தெரிந்து கொள்ளலாம். **கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்..... என்று**. (சங். 34:8). ஆம், கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்க்கும் படியாக அழைக்கிறார். இந்த அழைப்பை, தாவீது கர்த்தர் நல்லவர் என்பதைத் தன் வாழ்வில் ருசித்துப் பார்த்த பிறகு கொடுக்கிறார்.

சரி, தாவீது கர்த்தர் நல்லவர் என்பதை எப்படி ருசிபார்த்தார், எப்பொழுது ருசி பார்த்தார், எங்கு ருசி பார்த்தார் என்பதைப் புரிந்து கொள்வதற்கு இதன் பின்னணிக்குள் நமது வழக்கத்தின்படி சென்று வருவோம். இதற்குத் தேவையான ஆதாரங்கள் Iசாமுவேல் 21:10-15 வசனங்களில் இடம் பெற்றுள்ளது. இந்த வசனங்கள் தாவீது ஓர் அசாதாரண சூழ்நிலையில் இருந்ததை விவரிக்கிறது.

ஆம், அந்நாட்கள் தாவீது சவுலின் கைக்குத் தப்பியோடித் திரிந்த நாட்கள் . ஜீவனுள்ள தேவனுடைய ஜனங்களுக்கு எதிராகக் கொக்கரித்த கோலியாத்தை வீழ்த்திய பிறகு இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் தாவீதின் செல்வாக்கு, ராஜாவாகிய சவுலின் செல்வாக்கை விட மிஞ்சி இருந்த கால கட்டம். ஆம், பெலிஸ்தியனைக் கொன்று திரும்பிய வெற்றிக் கொண்டாட்டத்தின் போது, ஸ்திரீகள் ஆடிப்பாடி, **சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்** என்று குதூ கலித்தனர் (Iசாமு. 18:7). இது போதாதா சவுல் தாவீதை விரோதிப்பதற்கு! தாவீதுக்கு எதிரான சவுலின் வேட்டை ஆரம்பமாகிவிட்டது.

ஆகவே, சவுலின் கொலை வெறிக்குப் பயந்து தாவீது, காத்தின் இராஜாவாகிய ஆகீசின் எல்லைக்குள் சென்றுவிட்டான். தாவீது ஏன் இங்கே போனான் என்பது புரியாத புதிராக உள்ளது. அச்சமயத்தில் தாவீது போகக் கூடாத ஓர் இடம் இருக்குமானால் அது காத்தின் எல்லை தான். ஏனெனில், இந்த காத் தான் தாவீதால் கொல்லப்பட்ட கோலியாத்தின் சொந்த ஊர்.

எப்படியோ தாவீது போகக்கூடாத இடத்திற்குப் போய் விட்டான். அப்படி கோலியாத்தின் ஊராகிய காத்துக்கு இவன் சென்றபோது, ராஜாவின் மனுஷர் இவனை அடையாளம் கண்டுகொண்டனர். அப்பொழுது, அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டதையும், அடுத்து அவர்கள் தன்னை ராஜாவாகிய ஆகீசிடத்தில் கொண்டு போகும் போது என்ன நடக்கும் என்பதையும் கனகச்சிதமாகப் தாவீது புரிந்து கொண்டான். ஆயினும், இவன் ராஜாவின் மனிதரிடத்தில் தன்னைத் தப்ப விடும்படியான எந்த மன்றாட்டையும் வைக்கவில்லை. சொல்லப்போனால், அந்த எக்கச்சக்க சூழ்நிலையில் அவன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. மாறாக, உயிருக்குப் பயந்திருந்த நிலையிலும் தடுமாறாமல் கர்த்தரைத் தேடி அவரிடத்தில் முறையிட்டுள்ளான்.

அங்கே விபரீதச் சூழலில் மாட்டிக் கொண்ட தாவீது பித்தங்கொண்டவன் போல நடந்து கொண்டான். ஆம், ஆகிசுக்கு முன்பாகத் தன் முகநாடியை வேறுபடுத்தி, வாசற் கதவுகளிலே, கீறிக்கொண்டு, தன் வாயிலிருந்து நுரையைத் தன் தாடியில் விழப்பண்ணிக் கொண்டிருந்தான். வலிய வந்து தன்னிடத்தில் வசமாய் மாட்டிக் கொண்ட தாவீதை ராஜா பழிதீர்ப்பார் என்று ராஜாவின் ஊழியக்காரர் எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில், ராஜா தன் ஊழியக்காரரை நோக்கி; இதோ இந்த மனுஷன் பித்தங்கொண்டவன் என்று காண்கிறீர்களே: இவனை என்னிடத்தில் கொண்டு வந்தது என்ன? (21:14) என்று கடிந்து கொண்டதோடு, **எனக்கு முன்பாக பயித்திய சேட்டை செய்ய, நீங்கள் இவனைக் கொண்டு வருகிறதற்கு, பயித்தியகாரர் எனக்குக் குறை வாயிருக்கிறார்களோ? இவன் என் வீட்டிலே வரலாமா என்றான்** (I சாமு. 21:15) இதன் பிறகு, இவன் ராஜ சமூகத்திலிருந்து துரத்தி விடப்பட்டுத் தப்பியோடுகையில் பாடப்பட்டது தான் சங்கீதம் 34.

சவுல் ராஜாவுக்குப் பயந்து தாவீது ஆகீசின் எல்லையான காத்துக்குச் சென்றதுமுதல், ஆகீசின் சமூகத்திலிருந்து அவன் விரட்டப்பட்டது வரையிலான சம்பவங்களை நாம்

கவனிக்கும் போது, தேவனின் கரமும், தேவ வழி நடத்துதலும் தாவீதோடு இருந்தே உள்ளது என்பதை நம்மால் உணரமுடிகிறது. இங்கே, நீங்கள் ஒரு கேள்வியை எழுப்பலாம். தாவீது வேடமிட்டுப் பயித்தியங்கொண்டவன் போல், நடித்தது தேவத்திட்டத்தின்படியானதா என்று? என்னைப் பொறுத்தளவில் இது தேவ திட்டத்திற்கு அப்பாற் பட்டது என்று ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எப்படி யெனில், சங்கீதத்தில் வரும் தாவீதின் வார்த்தைகளை பாருங்கள். **நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவி கொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கி விட்டார்** என்றும், **இந்த ஏழை கூப்பிட்டான் கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்**(34:6) என்றும் பாடி புளகாங்கிதம் அடைகிறார். (சங் 34:4). தாவீது வேடமிட்டுச் செயல்பட்டது தேவன் வெறுக்கும் செயலாக இருந்திருக்குமானால், அவன் தேடின போது, அவனுக்குச் செவி கொடுத்து, அவனுடைய எல்லாப் பயத்துக்கு நீங்கலாக்கியிருந்திருக்கமாட்டாரே! நமக்கு விளங்காத ஒரு காரணத்திற்காகத் தேவன் இதை ஏற்றுக் கொண்டார் அல்லது சகித்துக் கொண்டார் என்று நாம் தாராளமாக நம்பலாம். சரியா!

சரி, சங்கீதம் 34 க்கான பின்னணித் தகவல்களிலிருந்தும், அதில் வரும் கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள் என்னும் அழைப்பிலிருந்தும் நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது கவனிப்போம்.

### I. *சுய புத்தியின் மேல் சாராதிருக்கும்படியான அழைப்பு*

"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்" என்ற ழைக்கும் தாவீதின் மூலம் கிடைக்கும் முதல் அழைப்பு, சுய புத்தியின் மேல் சாராதிருக்க வேண்டும் என்பது.

சுய புத்தி என்பது அவரவரின் சொந்தப்புத்தி. தேவனால் எல்லோருக்கும் புத்தி கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆற்றலை ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் சரியாகப் பயன்படுத்த வேண்டுமென்பதே தேவனின் எதிர்பார்ப்பு. ஒரு சமயம் பெலிஸ்தரோடு நடக்கவிருந்த போரின் போது, ஒரு தீர்க்கதரிசி செய்ய வேண்டிய வேலையை ராஜாவாகிய சவுல் செய்துவிட்டான். அவன் பலியிட்டு முடிக்கிறபோது வந்து சேர்ந்த சாமுவேல் சவுலைப் பார்த்து ***புத்தியீனமாய்ச் செய்தீர்*** என்றார்.(1சாமு 13:13). இப்படிப்பட்ட செயல்பாடு

குறித்து ஞானி சாலமோன் கூறும்போது, "உன் சுய புத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடு கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதையை செவ்வைப்படுத்துவார்". [நீதி. 3:5,6] என்றான்.

இதைத்தான் தாவீது ஆகீஸ் ராஜாவின் ஊழிக்காரருக்கு முன்பாகச் செய்தார். ஆம், ஆகீசின் மனிதர் இவனை அடையாளம் கண்டுகொண்ட போது, அடுத்து இவனை இராஜாவின் சமூகத்திற்கு இழுத்துச்செல்லப்போகிறார்கள் என்பதை உணர்ந்த நிலையிலும் தாவீதின் செயல்பாட்டை நாம் கவனிக்க வேண்டும். அவர்களிடம் தயவாய்ப் பேசி தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்யவில்லை. சொல்லப்போனால், அந்த அபாய சூழ்நிலையில் இவன் ஒரு வார்த்தை கூடப் பேசினதாக இல்லை. ராஜாவின் ஊழியக்காரர் பேசின வார்த்தைகளையெல்லாம் தன் மனதிலே வைத்துக்கொண்டு தேவனிடமே முறையிட்டுள்ளான். இராஜாவின் ஆட்களின் தயவையோ, ராஜாவின் தயவையே, தேடாமல், கர்த்தரையே தேடி கூப்பிட்டிருக்கிறான் [சங். 34:4,6]. தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்கு புத்திமான்களுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ! [ஏசாயா 5:21] என்னும் உண்மையை தன் வாழ்வில் உணர்ந்து வாழ்ந்துள்ளான். அதினிமித்தமே. அவன் பாதைகள் செவ்வைபடுத்தப்பட்டது. அதன் பிறகு தான், கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள் என்று அழைப்பு கொடுக்கிறார்.

அருமையானவர்களே! கர்த்தர் நல்லவர் என்பதை குறித்துப் பார்ப்பதற்கு நாமும் நம்முடைய சுயபுத்தியின் மேல் சாயக்கூடாது என்பதை முழுமனதோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வுண்மையை எரேமியா தீர்க்கதரிசி எங்ஙனம் கூறுகிறார் பாருங்கள். **கர்த்தவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்** என்று [எரே 10;23]. எச்சூழலிலும் நாம் நம் அறிவுக்கு வேலை கொடுத்துவிடக்கூடாது.

'ஆனால், உலகெங்கிலும் வாழும் கிறிஸ்தவ சமுதாயம், தங்கள் பார்வைக்கு ஞானிகளாகவும், புத்திமான்களாகவும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆன்மீக உலகில்

காணப்படும் அவலங்களுக்கு இதுதான் அடிப்படை. மிகப் பெரும்பாலானோரின் செயல்பாடு ஆரோனின் குமாரர்களான நாதாப், அபியூ, ஆகியோரின் செயல்பாடு போன்றே உள்ளது. (லேவி. 10:1-2) நாதாப், அபியூ போன்றவர்கள் பக்திச் செயல்பாடு உடையவர்களாயிருந்தும், கர்த்தரைத்தேட வேண்டிய அளவுக்குத் தேடாமல் சுயபுத்தியின் மேல் சார்ந்து காரியமற்றியதால், கர்த்தருடைய சந்நிதியில் ஐயோ வைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

ஆகவே, நம் சரீர வாழ்விலும், ஆவிக்குரிய வாழ்விலும் சூழ்நிலை எப்படி கைமீறிப் போனாலும், நம்முடைய அறிவுக்கு வேலை கொடுக்காமல் கர்த்தரைத் தேடி அவர்காட்டும் வழிகளில் நடக்கத் தீர்மானிப்போம்.

## II. *ஆபத்துக் காலங்களில் கர்த்தரை நம்பும் படியான அழைப்பு*

**கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்** என்றழைக்கும் தாவீதின் மூலம் கிடைக்கும் அடுத்த அழைப்பு, ஆபத்துக் காலங்களில் கர்த்தரை நம்பவேண்டும் என்பது.

எல்லாம் நன்றாகவும், நாம் விரும்புகிறபடியும் போகும் போது, கர்த்தர் மீது நம்பிக்கை வைத்து வாழ்வது சுலபம். ஆனால், அது உண்மையான பக்தி அல்ல. இஸ்ரவேல் ஜனங்களின் ஆன்மீக வாழ்வு அதல பாதாளத்திற்குச்சென்றது இப்படிப்பட்ட மனநிலையால் தான். ஆபத்துக் காலங்களில் அவர் மீது நம்பிக்கை வைத்து வாழ்வது தேவனால் எதிர்பார்க்கப்படும் ஒன்றே. அதைத்தான் தாவீது அவனுக்கு எதிர்ப்பட்ட ஆபத்தான நேரத்தில் செய்து காட்டினான். தன் சுய புத்தியை நம்பாமல் கர்த்தரைத் தேடி விடுதலையைப் பெற்றுக்கொண்டான். எப்படி கர்த்தர் நல்லவர் என்று ருசித்துப் பார்க்கும்படி சங்கீதம் 34 வலியுறுத்துகிறதோ அதுபோல **ஆபத்துக்காலங்களில் கர்த்தர் அனுகூலமானவர் என்பதை** சங்கீதம் 46 எடுத்தியம்புகிறது.

கர்த்தர் நல்லவர் என்பதை நாம் ருசித்துப்பார்க்கும் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், ஆபத்துக்காலங்களில் தைரியம் காட்டி, கர்த்தர் மீது நம்பிக்கை வைத்துச் செயல்பட வேண்டும். **ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால் உன் பெலன் குறுகினது** என்று நீதிமொழிகளில் வாசிக்கிறோம்( 10:24). சங்கீதம் 91:15 இக்கருத்துக்கு மேலும் வலு சேர்க்கிறது. **அவன் என்னை நோக்கி கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து அவனைத் தப்புவித்து அவனைக் கணப்படுத்துவேன் என்று.**

அன்பானவர்களே! ஆபத்து காலங்களில் கர்த்தர் மீது நம்பிக்கை வைக்கும் காரியத்தில் நாம் எந்நிலையில் உள்ளோம்? ஆபத்து என்பது சரீர வாழ்விலும் வரும், ஆன்ம வாழ்விலும் வரும். ஆபத்துகளை நாம் சரியாக எதிர்கொள்ளா விட்டால், அதன் பாதிப்பு நித்திய காலத்துக்குமான ஒன்றாக மாறிவிடும். ஆகவே தான் இயேசு ஆண்டவர், ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் என்று கூறுகிறார் [மத். 10:28].

அப்படியானால், ஆன்ம வாழ்வுக்கான ஆபத்து எது? பவுலடியார் விசுவாசத்தில் தான் பெற்றெடுத்த உத்தம குமாரனுக்கு எழுதும்போது **உன்னைக் குறித்தும், உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு** என்கிறார். [IIதீமோ 4:15] உபதேசம் குறித்து ஏன் இங்கே எச்சரிக்க வேண்டும்? உபதேசசத்தில் எச்சரிக்கையாயிராவிட்டால் பெரிய ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்பது தானே அதன் பொருள். இது குறித்து யோவான் அப்போஸ்தலன், கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடைய வனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக் கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன் என்கிறார். [II யோவான் 9].

ஆகவே, நம்மை இறுதி நாளில் நியாயந்தீர்க்கக்கூடிய வார்த்தைகளடங்கிய [யோவான்12:48] கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் நம்பிக்கை வைத்து வாழ்ந்து கொண்டுள்ளோமா அல்லது ஏதாவது ஆவிக்குரிய ஆபத்தில் உள்ளோமா என்று சீர்தூக்கிப் பார்ப்போம்.

**III. கர்த்தருடையவர்கள் அவருக்குப் பயந்திருக்கும்படியான அழைப்பு:**

"**கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்**" என்றழைக்கும் தாவீதின் மூலம் நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு அழைப்பு, கர்த்தருடையவர்கள் அவருக்குப் பயந்திருக்க வேண்டும் என்பது.

உயிருக்கு உலைவைக்கும் ஓர் ஆபத்தான சூழ்நிலையில் சிக்கித் தன் சுயபுத்தியின் மேல் சாயாமல், ஆபத்தான காலத்தில் கர்த்தரை நம்பி தன்னை விடுவித்துக்கொண்ட தாவீது "**கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்**" என்று மாத்திரம் சொல்லாமல், அடுத்த வசனத்தில் "**கர்த்தருடைய பரிசுத்த வான்களே அவருக்குப் பயந்திருங்கள்; அவருக்குப் பயந்தவர்களுக்கு குறைவில்லை**" என்றும் கூறுகிறார் [34:9].

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திர யாத்திரையைச் கிட்டத்தட்ட நிறைவு செய்து கானானுக்குள் பிரவேசிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் போது, தேவன் அவர்களுக்குக் கொடுக்கும் முதல் போதனை "**நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து**" நட என்பதே [உபா. 6:1] எதற்கு அப்படிப் பயப்பட வேண்குமாம்? "**இஸ்ரவேல் நன்றாயிருப்பதற்கு**'' [உபா. 6:3]

**அப்படியானால், அருமையானவர்களே! நாம் தேவனுக்கும் பயன்படுகிறோமா என்பது உண்மையானால், குறைந்தது இரண்டு காரியங்கள் அதற்கு உரைகல்லாக இருக்கும்.**

1. கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்வது [பிர 12:13]

2. தீமையை விட்டு விலகுவது அல்லது வெறுப்பது [நீதி8:13]

பயந்து கர்த்தரின் கட்டளைகளை கைக்கொள்ள வேண்டுமென்பது ஒட்டு மொத்த உலகத்திற்குமானது. கர்த்தரின் வார்த்தைகளைக் கைக் கொள்வதோடு தீமையை விட்டுவிலக வேண்டுமென்பது கர்த்தரை நேசிப்பவர் களுக்கானது. தாவீது, இங்கே இரண்டாவது பற்றியே பேசுகிறார்.

அப்படியானால்,இரண்டாவது தான் எனக்கானது நான் தான் பயந்து தேவனை நேசிக்கிறோனே என்று சொல்லாம். ஒருவேளை, உங்கள் பார்வையில்அது சரியாக இருக்கலாம். ஆனால், அவருடைய உபதேசக் கோட்பாடுகள் அனைத்துக்கும் நீங்கள் உங்களை கீழ்ப்படுத்தாமலிருந்தால், அதாவது மனித போதனைகளுக்கும் பாரம்பரிய கோட்பாடுகளுக்கும் அடிமைபட்டிருந்தால் அவருக்கு பயப்படுகிறவர்களாக இருக்க முடியாது. முதலில், அவருக்குப் பயப்பட்டு அவருடைய எல்லாக் கற்பனை களுக்கும் கீழ்ப்படிய வேண்டும். அதன் மூலம் பரிசுத்தவான், நீதிமான், மெய் கிறிஸ்துவன் என்ற உச்சத்தை தொட்டு அப்படி வாழக்கூடிய வாழ்வில் பாவமானவைகளை விட்டு விலக வேண்டும். அது தான் சரீரத்திலும், ஆவியிலும் குறைவில்லாத ஓர் நிலையை பெற்றுத்தரும். இக்கருத்தை அடிப்படையாக வைத்தே தாவீது சிங்கங்குட்டிகள் தாழ்ச்சி அடைந்து பட்டினியாயிருக்கும் கர்த்தரைத் தேடுகிறவர் களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது என்கிறார்.[34:10].

ஆகையால், நாம் காரியங்களைத் தவறாகப் புரிந்து கொண்டு ஆவியிலும், சரீரத்திலும், ஏமாந்து போகவேண்டாம். தேவனுடைய இருதயத்துக்கேற்ற தாவீதின் அழைப்பை ஏற்று நமது பக்தி வாழ்வைச் செம்மையாய் நடத்துவோமாக! ஆமென்!!

# ஆவியின் ஒருமை

Bro. J.C. சோட்

எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலன் பவுல் இவ்வாறு எழுதுகிறார்: ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தி யென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய் அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங் கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம் பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும். எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக் குள்ளும் இருக்கிறவர். எபேசியர் 4:1–6.

ஆவியின் ஒருமை பற்றி பவுல் இங்கு பேசுகிறார். ஒரே ஆவி உண்டு. அவர் தேவத்துவத்தில் ஒரு நபராக, (ரோமர் 1.20) பிதாவாகிய தேவனோடும், குமாரனாகிய தேவனோடும் இணைந்திருக்கிறார்.

தேவத்துவத்தின் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய ஒரு பங்கு அல்லது ஒரு குறிப்பிட்ட பணி இருந்தது. பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் அடங்கிய வேதாகமத்தை எழுத பலரை பரிசுத்த ஆவியானவர் வழி நடத்தி உதவியிருக்கிறார். எனவே, வேதாகமத்தில், ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவனுடைய வசனங்கள் இருக்கின்றன (II பேதுரு 1:20:21;II தீமோ 3:16,17)

வசனங்கள் ஆவியின் வார்த்தை என்றும் அல்லது சத்தி யத்தின் ஆவி என்றும் மீண்டும் மீண்டுமாகச் சொல்லப்பட்டி ருக்கிறது. (யோவான் 14:17:15:26; 16:13). தேவ வசனமா கிய ஆவியின் பட்டயம் என பவுல் அதைக் குறிப்பிட்டார். (எபே. 6:17) எபிரேய எழுத்தர் சொன்னார்; ‘‘ஆகையால், அந்த திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமை யினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுத லில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும்

உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும் கணுக்களையும், ஆவியையும் கணுக்களையும், ஊனையும் பிரிக்கத் தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது'' (எபி.4:11,12).

தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் வார்த்தையானது முற்றிலும் சீராக இருக்கிறது. அது பூரணமாகவும் இறுதியானதாகவும் இருக்கிறது. அதன் மூலமாக தேவன் சொல்ல விரும்பியதைச் சொல்லியிருக்கிறார்; தாம் சொல்ல விரும்பிய சகலவற்றையும் சொல்லியிருக்கிறார், முரண்பாடுகள் எதுவும் அதில் இல்லை. வசனமானது ஒருவனை ஒன்றைச் செய்யச் சொல்லுவதும், மற்றொருவனை வேறொன்றைச் செய்யச் சொல்லுவதும் கிடையாது. அதனோடு எதையும் சேர்க்கவோ அல்லது அதிலிருந்து எதையும் எடுத்துப் போடவோ அல்லது எவ்வழியிலும் மாற்றவோ கூடாது, (வெளி 22:18, 19; யோ 9 – 11) சந்தேகமின்றி பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலினால், ஒரே சுத்த நற்செய்தியைத் தான் போதித்து வருவதாகவும், யாராவது வேறொரு நற்செய்தியைப் போதிக்க வந்தால், அவன் கர்த்தருடைய தூதனாகவே கூட இருந்தபோதிலும், தேவனுடைய சாபம் அவன் மேன் இருக்கும் என பவுல் கூறினார் (கலா 1:6 –9)

ஆகையால், ஆவியானவர் வசனத்தை ஏவுதலினாலே கொடுத்துள்ளார். எனவே, ஒருவன் அதை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிந்து தனது வாழ்விலும் இதயத்திலும் அதை ஏற்றுக் கொண்டால் அதுவே அவனுடைய இரட்சிப்புக்கு ஏதுவாகும். பேதுரு எழுதுகிறார்: ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள். அழிவுள்ள வித்தினாலே அல்ல என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே (1பேதுரு 1:22, 23). விதைக்கிறவனுடைய உவமையை இயேசு கூறினார் : அதிலே தேவனுடைய வார்த்தையாகிய விதயானது வித்தியாசமான பலதரப்பட்ட மண்ணில் விழுந்தது பற்றிக் கூறுகிறார். சில விதைகள் நல்லநிலத்தில் விழுந்தது. நல்ல

இருதயங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதன் விளைவாக நல்ல விளைச்சலும், நல்ல பலனும் கிடைத்தது. (மத் 13) ஜீவனை ஆவியானவர் தேவனுடைய வசனமாகிய விதைக் குள் வைத்தார்.

அப்போஸ்தலன் பவுல் சொன்னார் : ''நாம் யூதராயினும், கிரேக்கராயினும் அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல் லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ் நானம் பண்ணப்பட்டு எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் ( கொரி 12:13) பரிசுத்த ஆவியின் திரு முழுக்கைப்பற்றி பவுல் இங்கு பேசவில்லை. மாறாக, தமது வசனத்தின் மூலமாக கர்த்தருக்குக் கீழ்ப்படிய ஒருவனை ஆவியானவர் வழி நடத்தும் உண்மையை குறிப்பிடுகிறார். அதின் ஒரு பகுதி ஒரே சரீரத்திற்குள் அல்லது கர்த்தரின் ஒரே சபைக்குள் திருமுழுக்குப் பெறுவது. இப்போது, தமது வார்த்தையை உபதேசிப்பதின் மூலம் ஒருவனை சபையில் சேர்க்க தண்ணீரில் மூழ்கி திருமுழுக்குப் பெறவும், மற்றொரு வனை தெளித்து திருமுழுக்குப் பெறவும் ஆவியானவர் வழி நடத்தமாட்டார். ஆவியானவர் அதாவது ஆவியின் வார்த்தை அனுமதிக்காத பல காரியங்கள் ஆவியானவர் மேல் சுமத்தப்படுகின்றன.

ஆனால், கர்த்தரின் சபையாகிய ஒரே சரீரத்திற்குள் நாம் ஒரு தடவை வந்துவிட்டால், பின்னர் **ஒரே ஆவிக்குள்ளாகத் தா கந்தீர்க்கப்பட்டோம்** என அவர் சொல்லுகிறார். அதாவது, நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்த பின்னர் தொடர்ந்து ஆவியால் தாகந் தீர்க்கப்படுகிறோம் அல்லது தேவனுடைய வசனமாகிய ஆவி யின் வசனத்தைப் பின்பற்றுகிறோம். நாம் இனி ஒரு போதும் தாகமாக இராதபடியும். பசியாக இராதபடியும் ஜீவத் தண்ணீரிலும் ஜீவ அப்பத்திலும் நாம் பங்கு பெற வேண்டு மென கிறிஸ்து கூறினார்.

இப்போது, ஆவியானவர் தமது வார்த்தையை மனிதனுக்குக் கொடுக்கும் பணியைப் பூரணமாக முடிக்கும் வரையிலும், அப்போஸ்தலர்களும், அவர்கள் கைகளை வைத்துத்தேர்ந்தெடுத்த சீடர்களும் தேவனிடமிருந்து வந்தவர்கள் என்றும், தேவனுடைய செய்தியை அளிக்க அவ ரால் அனுப்பப்பட்டருந்தனர் என்றும் மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ளும் படியாக , அவர்கள் அற்புதங்களைச் செய்ய அனு மதித்தார். ஆனால், புதிய ஏற்பாடு முழுமையான வடிவில் மனிதனுக்குக் கொடுக்குப்படும் படியாய் பரிசுத்த ஆவியானவர் பலரை ஏவி, தேவசித்தத்தை

எழுதிக்கொடுத்தவுடன் அற்புதஅடையாளங்களுக்குத் தேவையில்லாமல் போயிற்று. ஆகவே அவை ஒழிந்து போனது. பவுல் Iகொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் இதை மிகத் தெளிவாகக் காட்டுகிறார்.

ஆவியின் ஒருமையையும் ஆவியானவர் வெளிப் படுத்தின சத்தியங்கள் எப்படி ஒருமையை உண்டாக்கின என்பதையும் கவனமாகப் பாருங்கள். தேவன் பிரிந்திருக்க வில்லை கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியும் பிரிந்திருக்க வில்லை. மாறாக அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள்.1 அவர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள், சேர்ந்து செயல்படுகின்றனர். அது போலவே அவர்கள் பேசிய வசனங்கள் நம்மை ஒற்றுமைப்படுத்தவும் ஒன்றாக்கவும் செய்யும்.

ஒரே ஒரு நற்செய்தியும், இரட்சிக்கப்பட ஒரே வழியும் மட் டுமே இருப்பதாக வார்த்தையில் ஆவியானவர் வெளிப்படுத்துகிறார். கிறிஸ்து கூறியிருக்கிறார். நீங்கள் உல கமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங் கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் ; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16:15, 16) சகலரும் அந்த நற்செய்தியைக்கேட்டு விசுவாசித்துக் கீழ்ப்படிந்தால் எல்லா ருமே ஒரே வழியில் இரட்சிக்கப்படுவர். இரட்சிக்கும் கர்த்த ரின் ஒரேவழி இதுவே. வேறு எந்த வழியிலாகிலும் ஒருவன் இரட்சிப்பு அடைய முடியாது.

ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே உண்டு என வார்த்தை யில் ஆவியானவர் நமக்குச் சொல்லுகிறார். (எபே 4:5) உலக மோ பல திருமுழுக்குகள் இருப்பதாகச் சொல்லுகிறது. ஆனால், பாவ மன்னிப்புக்கென்று (அப் 2:38) அடக்கம் எனப்ப டும் ஒரே ஒரு திருமுழுக்கைப் பற்றி மட்டுமே ஆவியானவர் கூறுகிறார். (ரோமர் 6:3, 4 ;கொலோ. 1:12). என் நண்பர்களே! மனிதன் கூருவது எப்படியாயினும், ஆவியானவர் ஒரே ஒரு திருமுழுக்கு மட்டுமே உண்டு என கூறுகிறார்.

ஒரே ஒரு சரீரம் அல்லது சபை மட்டுமே இருப்பதாக ஆவி யானவர் வார்த்தையில் நமக்குச் சொல்லுகிறார். (எபே 4:4) மீண்டும் பலசபைகள் இருப்பதாக தொடர்ந்து நாம் மனிதனிட மிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். தாங்கள் பரிசுத்த ஆவியானவருடைய வழி நடத்துதலில் இருப்பதாக

சொல்லிக் கொள்ளுபவர்கள் கூட, தேவனுடைய வசனத்தில் குறிப்பிடப்படாத சபைகளில் காணப்படுகின்றனர். ஒரே ஒரு சபை மட்டுமே இருப்பதாக தமது வசனத்தில் திட்டமாக வெளிப்படுத்தின ஆவியானவர் – சந்தேகமின்றி அது கிறிஸ் துவின்சபை தான் என்று அடையாளம் காட்டின ஆவியானவர் (மத் 16:18), தமது வசனங்களில் சுத்தமாக குறிக்கப்படாத பல சபைப் பிரிவுகளில் அங்கத்தினராகப் பலரையும் வழி நடத்து வாரா ? நிச்சயமாக மாட்டார். ஆவியானவர் பிரிந்திருக்க வில்லை, அவருடைய வசனத்தில் கூறியிருப்பதற்கு முர ணான காரியத்திற்குள் ஒருவனை வழிநடத்தமாட்டார். அப்படி யானால் மணிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சபைகளில் இருப் பவர்கள், ஆவியானவரால் அந்த சபைகளுக்குள் வழிநடத்தப் படவில்லலை என்று பொருள். அப்படிப்பட்ட மனித சபைக ளில் அங்கம் வகிக்கத் தமது வசனத்தின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் வழி நடத்தவில்லை. எனது நண்பர்களே! இந் தக் காரியங்களைப் பற்றி நாம் மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆவியானவர், வசனத்தின் வழியாக எப்படிப் பேசுகிறார் என்றும் எப்படிக் கிரியை செய்கிறார் என்றும் ஆவியின் ஒரு மையைக் குறித்து நாம் தொடர்ந்து சொல்லிக் கொண்டே போக முடியும். நாம் ஆவியின் வசனங்களைப் பின்பற்றி விசு வாசித்துக் கீழ்ப்படியும் பொழுது. நமக்குள் வாழும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளமுடியும். மேற்சொன்ன எல் லாமே ஆவியானவரின் போதனையின்படிதான், அதாவது வசனத்தின்படிதான் நடக்கிறது. அற்புதத்தினாலே எதுவும் நடப்பதில்லை. இன்னுமாக மேலே சொல்லியுள்ளபடி செய் தால் மட்டுமே கிறிஸ்துவோடு நாம் ஒன்றித்திருக்க முடியும். இந்த வாழ்வில் முற்றிலுமாக அவருக்கு விசுவாசமாக நடக் கும் போது கர்த்தரோடு சதாகாலமும் இருக்கத்தக்கதாக நாம் இறுதியில் பரலோக ராஜ்யத்திற்குச் செல்லமுடியும். பவுல் எழு தியபடி மோசம் போகாதிருங்கள் தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார். மனிதன் எதை விதைக்கிறானோ அதை யே அறுப்பான் தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் ஆவி யினாலே நித்திய ஜீவனை அறுப்பான் (கலா 6:7,8)

என் நண்பரே! நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினரா? இல்லையென்றால், கர்த்திரின் வச னத்தை நீங்கள் கேட்டு, கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட நாங்கள் ஜெபிக்கிறோம். ★

பெண்கள் பகுதி

# பொறுப்புள்ள ஸ்திரீ

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இம்மாதமும் உங்களோடு இத்தலைப்பின் கீழ் சில பயனுள்ள செய்திகளை பகிர்ந்து கொள்ள கர்த்தர் கொடுத்த சிலாக்கியத்திற்காக அவருக்கு நான் நன்றி கூறுகிறேன்.

சாலைகளில் பயணம் செல்லும்போது நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வது நம்முடைய கடமை. சில விதிகள் நம்மை எச்சரிக்கின்றன. அவ்விதிகளுக்கு ஏற்றாற்போல் பயணித்தால் விபத்தை தவிர்க்கலாம்.வாழ்க்கைப் பயணமும் அவ்வாறே உள்ளது. தரை, நீர், ஆகாயம் ஆகிய பயணங்கள் ஒவ்வொன்றும் ஒரு விதிமுறைக்குட்பட்டேயிருக்கிறது. ஒவ்வொரு காரியத்திற்கும் நாமே பொறுப்பாளிகள். சூழ்நிலையோ, மற்றவர்களோ அல்ல. நம்முடைய வாழ்க்கையிலே நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்திற்க்கும், தவறுகளுக்கும், தோல்விகளுக்கும்,நன்மைகளுக்கும் நாம்தான் காரணம்.

வாழ்க்கைப் பயணத்தில் பச்சை, சிவப்பு நிற விளக்குகள், குறுக்கு சாலைகள், வடிவங்கள், கூர்மையான வளைவுகள், கசப்பான நிகழ்வுகள் இன்னும் பாறைகள், கடினமான பாதைகள், தூசு, மண் இப்படிபலவற்றையும் கடந்து செல்ல வேண்டியயிருந்தாலும் என்னுடைய பிரயாணத்துக்கு நானே பொறுப்பாளி.

நம்முடைய ஆதிப் பெற்றோர்களாகிய ஆதாம், ஏவாளைப் போல பிறர் மீது பழியை போட்டுவிட்டு, நம் குற்றத்திற்காக நம்மை மறைத்துக் கொள்ளக்கூடாது. ஆதி:13:13ம் வசனத்தில், சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்கிறாள். 12ஆம் வசனத்தில் வாசிக்கும் பொழுது, "அதற்கு, ஆதாம் என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். இங்கே இருவரும் தங்கள் தவறை ஒத்துக்கொள்ளவில்லை. அநேக சமயங்களில் தவறை ஒத்துக்கொள்ளும் பக்குவம் நமக்கும் வருவதில்லை. எனவேதான், குடும்பம், சபை,சமுதாயம் ஆகிய இவைகளில் பிரச்சனைகள் வந்து சேருகிறது. குறிப்பாக பெண்களாகிய நாம் பிறர்மீது குற்றம் சுமத்தாமல் பொறுமையோடு பொறுப்புகளை ஏற்று செயல்படுவோமானால் அது நிச்சயம் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்துவ

குடும்பத்தை உருவாக்கும் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. பொறுப்புகளை நம்மேல் ஏற்றுக் கொள்வதென்பது முதிர்ச்சியடைந்த நிலைக்கு ஓர் அடையாளம். பொறுப்பான நிலையை சீக்கீரம் எட்டி விடுகின்றனர். சிலர் சற்று காலம்தாழ்த்தி பொறுப்பை அடைகின்றனர். சிலர் பொறுப்பாக நடந்து கொள்வதென்பதை அறியாமலேயே வாழ்க்கையை கழித்து விடுகின்றனர். அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு கூறுகிறார், "நான் குழந்தையாயிருந்த போது குழந்தையைப் போல சிந்திதேன். குழந்தையைப்போல யோசித்தேன். நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்" (I கொரி:13:11) என்று.

பிறர் செய்யட்டும் என்று நாம் பொறுப்பற்று இருக்கக்கூடாது. ஏசாயா தீர்க்கனின் அறைகூவலைப் பாருங்கள். "இதோ, அடியேன் இருக்கிறேன் ; என்னை அனுப்பும்" (ஏசாயா:6:8)என்றார். நாம் தூங்குகிறவர் களாயிராமல் விழித்திருந்து நம் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு. அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார் (எபேசி: 5:14).

இயற்கையை நாம் கவனித்தால் அவைகள் பொறுப்புடன் இருப்பதைக் காணாலம். உதாரணமாக, தாவரங்களை எடுத்துக் கொண்டால், அது வேர் ஊன்றி சீக்கிரம் வளரவேண்டும். இல்லாவிட்டால் அது பட்டுப்போகும். நதிகளும் அவ்வாறே பாய்ந்து, தன்னை சார்ந்திருக்கும் மரங்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நதிகளினால் மரங்களுக்ககு பயன் இல்லை. இந்த உண்மையை சங்கீதக்காரனாகிய தாவீது முதலாம் சங்கீதத்தில் அருமையாக நமக்கு விளக்கியுள்ளார். கொடியானது செடியில் நிலைத்திருந்தால்தான் கனி கொடுக்கும்.இல்லாவிட்டால் கொடாது. இந்த உண்மையை யோவான் 15:1-6 வசனப் பகுதிகளில் வாசித்து அறிந்து கொள்கிறோம். இயற்கையே, இவ்வாறு தங்கள் காரியங்களுக்கு தாங்களே பொறுப்பாக இருக்கும் போது நாம் பொறுப்புள்ளவர்களாயிருப்பது அதிக அவசியமானது.

எந்தெந்த வகையில் நாம் பொறுப்புள்ள வர்களாயிருக்க வேண்டும் என்று வசன ஆதாரங்களோடு கருத்துக்களைப் பார்ப்போம். அன்றாடவாழ்வில்; ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனு மாயிருப்பான்.

**வேதாகமம் சம்பந்தமாக :** ஒருவன் இந்தத் தீர்க்கதரிசனப் புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார் (வெளி:22:19).

**இரட்சிப்பு :** மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டுவிலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் (அப்:2:40).

**தாலந்துகளை பயன்படுத்திக் கொள்ளுதல்:** யாரிடம் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவர்களிடம் அதிகம் எதிர்பார்க்கப்படும் (மத் : 25:1430).

**தருணங்களை பயன்படுத்திக் கொள்ளுதல் :** ஆகையால், நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக் கடவோம் (கல:6:10).

**சகோதரர்களுக்குள் உறவு :** பொறுப்பற்ற ஒருவன்தான், காயீனைப் போல இப்படியொரு கேள்வியைக் கேட்கமுடியும்.

....கர்த்தர் காயீனை நோக்கி : உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார். அதற்கு அவன் நான் அறியேன்: என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான் (ஆதி:4:9).

**அஜாக்கிரதை :** ....... "அக்கினியைக் கொளுத்தினவன் அக்கினிச் சேதத்திற்க்கும் உத்தரவாதம் பண்ண வேண்டும்" (யாத்:22:6).

**கடன்:** ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; (ரோமர்:13;8). உடன்படிக்கையை மீறுகிறவர்களுமாய் இருக்கக் கூடாது (ரோமர் 1;31).

**வார்த்தை :** நீ நேர்ந்து கொண்டதைச் செய்யாமற் போவதைப் பார்க்கிலும் நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம் (பிரசங்கி 5:5).

**செயல் :** ..... மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். (கலா:6:7) அன்பான சகோதரிகளே, மேலே பார்த்த வசனங்களை வாசித்து நம் பொறுப்பை அதிகரித்துக் கொண்டால் தேவனுக்கு பிரியமான வாழ்வை இப்பூமியிலே வாழ்ந்து, மறுமையிலே நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வோம். கர்த்தர் நமக்கு சுதந்திரமாகக் கொடுத்த நம் பிள்ளைகளுக்கும் இவ்வசன ஆதாரங்களை காட்டி, ஊட்டி வளர்த்தால் அவர்களும் வளர்ந்து ஒரு பொறுப்புள்ள கிறிஸ்தவர்களாக வாழ அது உதவி செய்யும். எனவே, நாம் நம் பொறுப்பை வளர்த்துக்கொள்வோம். ஆமென்!

வாலிபர் பகுதி

# திராட்சைத் தோட்டத்தில் ஓர் அத்திமரம்

Dr. ஏபில் நாயகம்

**வா**லிபர்களே! தேவனுடைய பெரிதான கிருபையினால் ஒரு புதிய ஆண்டை நம் வாழ்வில் கண்டிருக்கிறோம். வருடத்தை நன்மையினால் முடிசூட்டும் நம் தேவன் இந்தப்புதிய வருடத்தை நம் ஒவ்வொருக்கும் ஆசீர்வாதமானதாக இருக்கும்படி செய்வாராக!

ஒவ்வொரு புதிய வருடமும் நமக்கு புது நம்பிக்கை யையும், புது தைரியத்தையும், புதுவேகத்தையும், புது பெலனையும் கொடுக்கிறது. அதே நேரத்தில் தேவனால் நமக்கு கொடுக்கப்படும் ஒரு வாய்ப்பாகவும் புது வருடம் இருக்கிறது. அவருடைய சித்தம் செய்ய, அவருடைய வழியில் நடக்க, அவருடைய வார்த்தைகளை கற்றுத் தேற, அவர் மேல் வைத்திருக்கும் விசுவாசத்தில் வளர தேவனால் நமக்குச் கொடுக்கப்படும் கால அவகாசமாகவும் புது வருடம் இருக்கிறது.

லூக் 13:6-9ல், ஓர் உவமையை வாசிக்க முடியும். அதிலிருந்து சில காரியங்களை தியானித்து கற்றுக் கொள்வோம். இந்த உவமையிலே, ஒரு அத்திமரத்தைப் பற்றி இயேசு கூறுகிறார். வசனம் 6ல்- அந்த அத்திமரம் ஒரு திராட்சை தோட்டத்தில் இருப்பதாக வாசிக்கிறோம். வழக்கமாக அத்திமரங்கள் காடுகளிலும் வழிகளின் அருகேயும் காணப்படக்கூடிய ஒரு மரம். அதை யாரும் பராமரிக்கமாட்டார்கள். எப்படி நம் ஊர்களின் சாலை யோரங்களில் புளியமரங்களும், வேப்பமரங்களும் வளர்ந்து இருக்கிறதோ அதைப் போல தான் அத்திமரமும். அதை யாரும் பெரிதாகப் பராமரிக்கமாட்டார்கள். ஆனால், இந்த உவமையில் காணக்கூடிய அத்திமரம் ஒரு திராட்சை தோட்டத்தில் இருக்கிறதை காண்கிறோம். அதுவும் தோட்டத்தின் நடுவில் நடப்பட்டுப் பராமரிக்கப்பட்டது.

வாலிபர்களே! நாம் ஒவ்வொருவரும் அந்த அத்தி மரத்தைப் போலத் தான். எபேசியர் 2-ம் அதிகாரத்தில் பாவங் களினால் மரித்தவர்கள் இவ்வுலக வழக்கத்திற்கேற்ற

படியானவர்கள் கீழ்படியானமயின் பிள்ளைகள், கோபக்கினையின் பிள்ளைகள், நம்பிக்கையில்லாதவர்கள், தேவனந்தவர்கள் என்று நாம் முன்னிருந்த நிலைமையை சுட்டிகாட்டுகிறது. ஆயினும், கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிய நம்மை மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்த படியால், இப்பொழுது தேவனுடைய திராட்சை தோட்டத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறோம். எப்படி வழியருகே இருக்கவேண்டிய அத்திமரம் வழக்கத்திற்குமாறாக திராட்சை தோட்டத்தில் பராமரிக்கபட்டதோ, அதைப்போல நாமும் காக்கப்பட்டுவருகிறோம். தேவனுடைய பெலத்தினாலே

சரி, அந்த உவமையில் அடுத்து நடந்தது என்ன? அந்த திராட்சத் தோட்டத்து எஜமான் அந்த அத்திமரத்திலே வந்து கனிகளைத் தேடினார். ஆம், அதை பராமரித்த தோட்டக்காரன் எஜமான் மூன்று ஆண்டுகளாக கனிகளை தேடினார். ஆனால், கனிகளை காணவில்லை. எனவே, எஜமான் தோட்டகாரனிடம் அத்திமரத்தை வெட்டி போட சொன்னார். வாலிபர்களே, ஒரு வேளை நம் வாழ்கையிலே தேவன் வந்து கனிகளை தேடினால், கனிகளைக் கண்டுபிடிப்பாரா? கனிகள் என்றால் என்ன? நம் எண்ணத்திலும், செயலிலும், சொல்லிலும், யோசனைகளிலும் கவனமாயும் ஜாக்கிரதையாயும் இருந்தால் நாம் நல்ல கனிகளைக் கொடுக்கிறவர்களாக இருப்போம். நம் எஜமானரான தேவன் கடந்த ஆண்டில் நம் வாழ்விலும் கனிகளை தேடியிருப்பார். அப்படித் தேடின போது நல்ல கனிகளை கண்டுபிடித்து மகிழ்ந்திருப்பாரா? அல்லது ஏமாற்றம் அடைந்திருப்பாரா? சிந்தியுங்கள்.

வசனம் 8–ல்– அந்தத்திராட்சை தோட்டத்தைப் பராமரிக்கும் தோட்டக்காரன் எஜமானிடம் இன்னும் ஒரு ஆண்டு கால அவகாசம் கேட்டான். அந்தக் கனிகொடாத அத்திமரத்திற்காக தோட்டக்காரன் பரிந்து பேசுகிறான். கடந்த மூன்று ஆண்டுகளாக கனி கொடுக்காமல் இருப்பதை மறந்து இன்னும் ஒரு வாய்பாக ஒரு வருடம் கால அவகாசம் கேட்டான். அந்த ஒரு வருடத்தில் எப்படியாவது கனிகொடுக்க வைத்துவிட வேண்டும் என்று. அதை சிறப்பாக பராமரிக்க முடிவு செய்தான்..... நான் மரத்தைச் சுற்றிலும் கொத்தி எருபோடுவேன் என்று எஜமானிடம் சொன்னான்.

வாலிபர்களே! ஒரு வேளை நமக்கு கொடுக்கபட்டிருக்கும் இப்புதிய ஆண்டு, நமக்காக பரிந்து பேசும் மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவால் ஒரு வாய்ப்பாக கொடுக்கப் பட்டிருக்கலாம். நாம் கனி கொடுக்காத ஒரு வாழ்வைகடந்த ஆண்டுகளில் வாழ்ந்திருந்தால் பரவாயில்லை. இந்த ஆண்டில் நாம் கனி கொடுக்க முயற்சி செய்வோம்.

அன்பு, சந்தோஷம்,சமாதானம்,நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்ற ஆவியின் கனிகளை நம் வாழ்வில் வெளிப்படுத்து கிறவர்களாக இருக்கப் பிராயசப்படுவோம். அப்படி கனிக்கொடுக்கும் வாழ்வை நாம் வாழ நம் தேவன் நமக்கு நிச்சயம் உதவி செய்வார். நாம் அவருடைய திராட்சை தோட்டத்தில் இருக்கிற படியால், அவருடைய வார்த்தைகளின் வழியாக நம்மை நடத்துவார்.

ஒரு வேளை நமக்குக் கொடுக்கப்படும் ஒவ்வொரு வாய்பிலும் நாம் தவறினால், II கொரி 5:10ல் வாசிக்கிறபடி நாம் கிறிஸ்துவின் நியாயசனதிற்கு முன்பாக வெளிப்படும்போது நாம் வெட்டப்பட் அத்திமரமாகிவிடுவோம்

எனவே வாலிபர்களே! நமக்கு கொடுக்கப்பட்ட இப் புதிய ஆண்டை, தேவனால் நமக்கு கொடுக்கப்பட்ட ஒரு பெரும் வாய்ப்பாக கருதி, கனிகளை கொடுக்கும் அத்திமரமாக மாறுவோம். மிகுந்த கனிகளைக் கொடுப்போம்.

பரலோகத்தின் தேவன் உங்களைக் பராமரித்துக் காத்து வழிநடத்துவாறாக! ஆமென்!! ★

---

## யார் கிறிஸ்தவன்?

கிறிஸ்துவைப் போல் சிந்திப்பவன்
கிறிஸ்துவைப்போல் நேசிக்கும் இதயமுடையவன்
கிறிஸ்துவைப்போல் நன்மை செய்ய துடிப்பவன்
கிறிஸ்துவைப்போல் வாழ்பவன்.

சிறுவர் பகுதி

# கீழ்ப்படிதல்

Dr. ப்ரைசி ஏபில்

**எ**ன்ன தம்பி, தங்கைகளே எப்படி இருக்கிறீர்கள்? லீவில் ஜாலியாக இருந்துவிட்டு பள்ளிக்கு சென்று நன்றாக அன்றைய பாடத்தை அன்றே படிப்பீர்களென கர்த்தருக்குள் நம்புகிறேன்.

நம் முன்னேற்றத்திற்கு கோபம், கீழ்ப்படியாமை, பக்தி இல்லாமை, சண்டை, பொறாமை, சோம்பல் என சில துர்குணங்கள் தடையாக இருக்கின்றது. இந்த மாதம் கீழ்ப் படியாமையை பற்றியும், கீழ்ப்படிதல் பற்றியும் சிந்திக்கலாம்.

தேவன் உலகத்தைப் படைத்து ஆதாமையும், ஏவாளையும் ஏதேன் தோட்டத்தில் வைத்து, தோட்ட நடுவிலிருக்கும் மரத்தின் கனியை புசிக்க வேண்டாமென்று சொல்லியும் பிசாசின் வஞ்சகத்தால் தேவ வார்த்தையை கீழ்ப்படியாமல் ஏவாள் கனியை புசித்து பின் தன் கணவனாகிய ஆதாமுக்கும் கொடுத்து முதல் பாவமாகிய கீழ்ப்படியாமையை உலகுக்குக் கொண்டு வந்ததை நீங்கள் அறிவீர்களென நம்புகிறேன். ஆக, கீழ்ப்படியாமையே உலகில் உண்டான முதல் பாவம்.

இன்று இவ்விதழில் பெற்றோருக்கு கீழ்ப்படியும் இரண்டு தேவ மனிதர்களை சந்திக்கப் போகிறோம்.

1. ஈசாக்கு
2. நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து

கர்த்தர் ஆபிரகாமின் கீழ்ப்படிதலையும், விசுவாசத்தையும் சோதிக்க அவனின் புத்திரனும், ஏக சுதனும், நேசக் குமாரனாகிய ஈசாக்கை மோரியா தேசத்து மலையில் தகனபலியாக பலியிட உத்தரவிட்டார்ங. (ஆதியாகமம் 22:1 உடனே ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து ஈசாக்கை கூட்டிக்கொண்டு தகன பலியிட விறகு கட்டைகளோடு இரு வேலைக்காரரோடு கழுதையின் மேல் சேணங்கட்டி புறப்பட்டு செனறான். வழியில் தகன பலிக்கு ஆடுகள் எங்கே என கேட்ட தன் மகனுக்கு ''கர்த்தர் பார்த்துக்கொள்வார்'' எனச் சொல்லி தேவன் காண்பித்த இடத்திற்கு வந்து பலிபீடத்தை உண்டாக்கி கட்டைகளை அடுக்கி ஈசாக்கை கட்டி பலிபீடத்தின் மேல் கிடத்தி தன் நேசக்குமாரனை வெட்டும்படிக்கு தன் கையை நீட்டி கத்தியை எடுத்தான். உடனே தேவன் **பிள்ளையை ஒன்றும் செய்யாதே** என்று தடுத்து, ஆபிரகாம் தேவனுக்கு பயன்படுகிறவன் என உலகுக்கு உணர்த்தினார்.

எனக்கு அருமையான கர்த்தரின் பிள்ளைகளே! ஈசாக்கு பலியிட ஆடில்லாதிருந்தும், தன் கைக்கட்டப்பட்டு விறகுக்

கட்டைகளின் மேல் படுக்க வைத்து கத்தியால் குத்தப்பட இருந்த நிலையிலும் தன் தகப்பன் சொல்படியும், செயல்படியும் கேட்டு கீழ்ப்படிந்து பெற்றோரின் **கீழ்ப்படிதலுள்ள பிள்ளை** என பெயர் பெற்றான்.

நம் ஆண்டவராகிய கிறிஸ்துவும் தாம் தேவனின் ஒரே குமாரன் என்று அறிந்திருந்தும் தேவ சித்தத்தின்படி யோசேப்பு, மரியாளின் புத்திரனாக பூமியில் 30 வயது வரை தன் தாய், தகப்பனுக்கு கீழ்ப்படிந்து நாசரேத்தூரில் பெற்றோருக்கு நல்ல பிள்ளையாக வாழ்ந்தார் ( மாற்கு2:2) தன் தாயுடன் தன் முப்பதாவது வயதில் கானான் என்னும் இடத்தில் நடந்த திருமணத்திற்கு சென்றிருந்து திருமணத்தில் திராட்சரசம் குறைவுபட்டதை மரியாள் கண்டு தன் மகனாகிய கர்த்தரிடம் சொல்ல தன் வேளை வந்த போது தேவ சித்தத்தின் படி ஆறு கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பச்சொல்லி, தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றி முதலாம் அற்புதத்தை செய்தார். (யோவான் 2:211)

தேவனுக்குப் பிறகு நம்மேல் அன்பாயிருப்பது நம் பெற்றோரே. அவர்கள் நம்மை கண்டிப்பதும், தண்டிப்பதும் நம் முன்னேற்றத்துக்கே என நினைவில் கொள்ள வேண்டும். உலக ரட்சகரான இயேசு பெற்றோருக்கு கீழ்ப்படிந்து சொல்கேட்டு நடத்தையும், தன் உயிர் பலியிடப் போகும் நிலையிலும் தகப்பனுக்குக் ஈசாக்கு கீழ்ப்படிந்து தன்னையே பலியாக ஒப்புக் கொடுத்ததையும் நாம் நம் நினைவில் கொண்டு தேவன் நமக்கு ஈவாக தந்த பெற்றோருக்கு கீழ்ப்படிந்து நடப்போம்.

சரி பிள்ளைகளே! அடுத்த மாதம் சந்திக்கும் வரை **பெற்றோருக்கு கீழ்ப்படிந்து நடப்போம்** என தீர்மானம் கொண்டுள்ள உங்களோடு சர்வவல்ல தேவன் இருப்பாராக.

**மனப்பாட வசனம் (எபேசியர் 6:1)**
பிள்ளைகளே! உங்கள் பெற்றோருக்குக்
கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம்.

★

**பழைய ஏற்பாட்டின் நாட்களில் குகைகள்**

* கல்லறை பூமியாக பயன்பட்டிருக்கின்றன (ஆதியாகமம் 23:9);
* வீடுகளாக பயன்பட்டிருக்கின்றன (ஆதியாகமம் 19:30; *I* ராஜாக்கள் 19:9)
* மறைவிடங்களாக பயன்பட்டிருக்கின்றன (யோசுவா 10:16)

# புதிய பிறப்பு

சகோ. பென்னி மார்ட்டீன்

பிரியமான திருமறை ஆசான் வாசகர்களுக்கு எனது மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன். இப்புத்தாண்டில் புத்துணர்வுடன் உங்களைச் சந்திக்க சத்துவம் தந்த சர்வவல்ல தேவனுக்கு முதலில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இப்புத்தாண்டில் நாம் புத்தாடைகளை உடுத்தியிருப்போம், வாழ்த்துதல்களைக் பரிமாறியிருப்போம். பல பழைய சிந்தனைகளும், வந்தனங்களும் காலச் சுவட்டில் கரைந்து போயிருக்கும். புதிய ஆண்டு பிறந்து விட்டது. ஆனால், நாம் புதிதாய் பிறந்துவிட்டோமா? புதிய பிறப்பு என்றால் என்ன? இப்புதிய பிறப்பு குறித்து பலர் தங்கள் இதயத்தில் உதித்த கருத்துக்களைப் பதிவு செய்திருக்கிறார்கள். இந்த புதிய பிறப்பு அல்லது மறுபிறப்பைப் பற்றி மத உலகில் மாறுபாடான கருத்துக்கள் தாறுமாறாக கரை புரண்டோடுகின்றன. மார்க்கப்பிரிவினர் புதிய பிறப்பைப் பற்றி தீர்க்கமாகச் சொல்லும் காரியம் என்னவென்றால் ஒருவர் இயேசு கிறிஸ்துவை தன்னுடைய ஜீவியத்தில் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது ஏற்படுகின்ற ஓர் அற்புத அனுபவம் என்பதாகும். தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிற பலர் ஒருவரையொருவர் சந்திக்கும் போது சிந்திக்காமல் கேட்கும் கேள்வி நீங்கள் மறுபடியும் பிறந்து விட்டீர்களா? என்பதாயிருக்கிறது. இக்கேள்விக்குப் பதில் ஒருவர் இல்லை என்று சொல்லிவிட்டால் அவரை வேற்றுகிரகவாசியை போல பார்ப்பார்கள். அப்போது பதில் சொன்ன நபர் வேடிக்கைப்பொருளாக மாறுவது வாடிக்கையாகிவிட்டது. உண்மையில் பார்த்தால் ஒருவர் கிறிஸ்தவராக இருந்தால் அவர் மறுபடியும் பிறந்தவர்தானே? ஒருவர் மறுபடியும் பிறந்திருந்தால் அவர் கிறிஸ்தவர்தானே? இதைப்புரிந்து கொள்வதற்கு விண்கலவிஞ்ஞானம் தேவையில்லையே. கிறிஸ்தவ வாழ்க்கையைப் பெலப்படுத்தும் அஸ்திபாரமாக இப்புதிய பிறப்பு இருப்பதால் இதைக்குறித்து விவரமாக வேதத்தின் வெளிச்சத்தில் நாம் காண்போம்.

**I. புதியபிறப்பின் அவசியம்**

யோவான் மூன்றாம் அதிகாரத்திற்கு நாம் திரும்பும்போது

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நிக்கொதேமு என்னும் பேர் கொண்ட ஒரு யூதனிடத்தில் அதிலும் குறிப்பாக ஒரு பரிசேயனாக இருந்துகொண்டு யூதர்களுக்கு அதிகாரியாக இருந்த ஒரு மனிதனிடத்தில் புதிய பிறப்பைப் பற்றி பேசுகிறதை நாம் பார்க்கிறோம். இது கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்பு போதிக்கப்பட்டது. அப்போது பழைய பிரமாணம் ஒரு சட்டமாக இருந்து கட்டுப்படுத்தியது என்பதை மனதில் வையுங்கள். ஆயினும் கிறிஸ்துவின் பிரமாணம் அல்லது கிறிஸ்தவம் வருங்காலத்தில் வரும்போது என்ன அவசியப்படும் என்கிற எதிர்ப்பார்ப்புடன் இது போதிக்கப்பட்டிருந்தது. ஆனால், ராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்பட்டபிறகு ஒருவர் அந்த ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமென்றால் மறுபடியும் பிறப்பது அவசியம் என்று நம் ஆண்டவர் விளக்கினார் (யோவான் 3:1-13).

தொடர்ந்து இயேசு கிறிஸ்து புதியபிறப்பு பற்றி விளக்கும்போது ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்றால் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது அவசியம் என்று வலியுறுத்தினார். முதலாவது ஒருவர் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க ஜலத்தினால் பிறப்பது அவசியம் என்று கிறிஸ்து சொன்னார். பொதுவாகவே பிறப்பு என்பது ஒரு புதிய வாழ்க்கை சம்பந்தப்பட்டது. ஆனால், இங்கே சொல்லப்பட்டிருக்கும் ஜலம் அல்லது தண்ணீர் எதைக்குறிக்கிறது? இதற்கும் சரீரப்பிரகாரமான பிறப்புக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. ஏனென்றால், கிறிஸ்து ஏற்கனவே நிக்கொதேமுவிடம் இந்த பிறப்பு ஒருவன் தன் தாயின் கர்பத்தில் இரண்டாந்தாரம் பிரவேசிப்பதிலிருந்து வேறுபட்டது என்று விளக்கிவிட்டார். எனவே, இங்கே ஜலம் அல்லது தண்ணீர் என்பது ஞானஸ்நானத்தைக் குறிக்கிறபடியால் ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் (கொலோசெயர் 2:12). ஒருவர் தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டு தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது அங்கே புதிய பிறப்பு அல்லது மறுபிறப்பின் அனுபவம் ஏற்படுகிறது.

## II. புதியபிறப்பின் அங்கம்

பிரியமானவர்களே, நம் கர்தராகிய இயேசு கிறிஸ்து (யோவான் 3:1-5) வசனங்களில் புதிய பிறப்பை உருவகநடையில் தான் பேசுகிறார். இதை நாம் சொல் அர்த்தரீதியாக எடுத்துக்

கொள்ளக்கூடாது. இதுகாறும் நாம் ஜலத்தினால் பிறப்பது என்பது ஒருவர் ஜலம் அல்லது தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவது என்று பார்த்தோம்.

அடுத்தது, புதிய பிறப்பின் மற்றுமொரு அங்கமாகிய ஆவியினால் பிறப்பது என்றால் என்ன? என்று பார்ப்போம். 1 பேதுரு 1 : 23ல் தேவ ஆவியினால் ஏவப்பட்ட மனுஷனாகிய பேதுரு, ஒருவர் தேவனுடைய வசனத்தினாலே ஜெநிப்பிக்கப்படுகிறார் என்று சொல்வதைக் கவனியுங்கள். ஆனால், அந்த வசனங்களை நமக்கு தந்தது யார்? பரிசுத்த ஆவியானவர். அப்படித்தானே? எனவே, ஆவியினால் பிறப்பதென்பதும், தேவனுடைய வார்த்தையினால் பிறப்பதென்பதும் ஒன்றுதான். பொதுவாக நாம் பார்க்கும்போது ஒருவருக்கு தேவனுடைய வார்த்தை மீது எப்போது விசுவாசம் உண்டாகிறது? தேவனுடைய வார்த்தைகளைக் கேட்கும்போது, அப்படித்தானே? (ரோமர் 10:17). ஒருவர் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தால் அதற்கு கீழ்ப்படிவார். இப்படித்தான் (1 பேதுரு 1:23)ல் நாம் ஆவியினால் சத்தியத்திற்கு கீழ்ப்படிவதன் மூலமாக மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிறோம் அல்லது தேவனுடைய வார்த்தையின் மூலமாக ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்று ஆவியானவர் வழிநடத்துகிறார். ஏனென்றால், பரிசுத்த ஆவியானவர் தாம் எழுதிக்கொடுத்திருக்கிற வார்த்தையினால் தான் பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும் நம்மை கண்டித்து உணர்த்துகிறார் (யோவான் 16:8).

பிரியமானவர்களே! நம் புதிய பிறப்பில் பரிசுத்த ஆவியானவர் முக்கியப்பங்கு வகிக்கிறார் அல்லது அவர் எழுதிக் கொடுத்த வார்த்தைகள் முக்கியப்பங்கு வகிக்கின்றன. புதிய பிறப்பு அழிவுள்ள வித்தினால் உண்டாவதில்லை. இங்கே அழிவுள்ள வித்து என்பது இப்பூமியிலே சரீரப் பிரகாரமான பிறப்புக்குத் தேவைப்படும் மனித வித்தைக் குறிக்கிறது. இது அழிந்துபோகும் தன்மை கொண்டது. ஆனால், நாம் மறுபடியும் பிறப்பது என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே என்பதை நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். இது ஒருபோதும் அழியாதது. அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் ஆவியினால் பிறக்கும் செயல் எப்படி நடந்தது என்பதற்கு நமக்கு உதாரணங்கள் உண்டு. குறிப்பாக கொரிந்து பட்டணத்தில் பவுல், வித்தாகிய தேவனுடைய வார்த்தையை விதைத்தார். அங்கே அதைக் கேட்டு அநேகர் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்போஸ்தலர் 18:8). இது அவர்களுக்குள்ளே மறுபிறப்பை உண்டாக்கியது.

III. புதியபிறப்பின் அடையாளம்

நாம் ஆவியினால் பிறந்தவர்களாயிருந்தால் அதன் அடையாளங்கள் நம்மில் வெளிப்படும். ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் என்று [யோவான் 3:6] ல் வாசிக்கிறோம். காற்று வீசுவதை நாம் பார்க்கமுடியாவிட்டாலும் கூட அதன் தாக்கத்தை நாம் உணர்கிறோம். அதேபோல் நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோம் என்பதை மற்றவர்களுக்கு நம் கிரியைக ளினால் வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் மற்றவர் கள் அதை அறிந்துகொள்வார்கள். குறிப்பாக அதன் மூலம் நம் பரமப்பிதா மகிமைப்படுவார்.

நம் புதியபிறப்பு ஆவியின் கனிகளில் வெளிப்பட வேண்டும். வேறுவிதமாகச் சொன்னால் ஆவியின் கனியைக் குறித்து பவுல் [கலாத்தியர் 5 :22-23] வசனங்களில் சொல்லி யிருக்கிறார். ஆவியனால் பிறந்த நாம் ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளவேண்டும் [கலாத்தியர் 5:16]. நாம் தேவனுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபடும்போது புதிய தாய் பிறக்காதவர்களென்று மற்றவர்களுடைய மனதில் பதிய வைத்துவிடுகிறோம். புதிதாய் பிறந்த ஒரு குழந்தை வளர வேண்டுமென்பது பெற்றோர்களுடைய விருப்பமா யிருக்கிறது. அதேபோல் ஆவிக்குரிய பிரகாரமாக புதியதாய் பிறந்த நாம் ஆவிக்குரிய பிரகாரமாக வளரவேண்டுமென்பது நம் பரம பிதாவின் விருப்பமாயிருக்கிறது. அந்த விருப்பத் திற்கு நாம் மறுப்பு தெரிவிக்கலாமா?

எனவே ஒருவர் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறப்ப தென்பது ஒருவர் கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டு, அதை விசுவாசித்து, தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவின் பேரிலுள்ள தன் விசுவாசத்தை அறிக்கை யிட்டு, இரட்சிக்கப்படும்படி தண்ணீரில் ஞானஸ்நானம் பெறும்போது கர்த்தர் தம்முடைய சபையில் அவரை சேர்த்துக் கொள்கிறார். அதாவது, அந்த நபர் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார் என்பதாகும். நீங்கள் மறுபடியும் பிறந்து விட்டீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? இல்லையென்றால், நீங்கள் இழந்துபோன நிலையில் இருக்கிறீர்கள். ஒருவர் இவ் வுலகத்தில் இரட்சிக்கப்படுவதற்கும் வருகின்ற உலகத்தில் தேவனோடு என்றென்றும் வாழ்வதற்கும் ஒரேவழி புதிய பிறப்பு அல்லது மறுபிறப்புதான். தேவன் தாமே உங்கள் யாவ ரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்! ★

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு,

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை 'பிப்ரவரி' மாத இதழில்)**

### நியாயாதிபதிகள் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள் (11-20 அதிகாரங்கள்)

1] பலத்த பராக்கிரமசாலியாக இருந்தது யார்?

2] யெப்தா எங்கே குடியிருந்தான் ?

3] பாலக்கின் தகப்பன் பெயர் என்ன?

4] இப்சான் எந்த ஊரைச் சேர்ந்தவன்?

5] கர்த்தர் இஸ்ரவேலரை பெலிஸ்தர் கையில் எத்தனை வருடங்கள் ஒப்புக்கொடுத்தார்?

6] சிம்சோனுடைய தகப்பன் பெயர் என்ன?

7] சிம்சோனுக்கு முன்பாக எதிர்ப்பட்ட மிருகம் எது?

8] எப்பிராயீம் மலைத் தேசத்தான் யார்?

9] இஸ்ரவேல் புத்திரர் எங்கே சபையாகக் கூடினார்கள்?

10] பினெகாஸின் தகப்பன் பெயர் என்ன?

### டிசம்பர் மாத வினாக்களுக்கான விடைகள்

1. அரோசேத் (4:2)
2. தெபொராள் (4:4)
3. செபுலோன், நப்தலி (5:18)
4. ஏபேரின் மனைவி யாகேல் (5:24)
5. ஏழு வருஷம்
6. உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ! நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்: உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றா (6:14)
7. யெகோவா, ஷாலோம் (6:24)
8. ஒப்ராவிலே, தன் தகப்பனாகிய யோவான் என்னும் அபியேஸ்ரினுடைய கல்லறையிலே (8:32).
9. இருபத்திரெண்டு வருஷம் (10:3)
10. கீலேயாத்திலே (10:17).

### சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| 1. பாலாமணி | — | காங்கயம் |
| 2. செல்வமணி குணசேகரன் | — | சென்னை |
| 3. தங்கதாய் | — | திருப்பூர் |
| 4. L. செல்வம் | — | சேலம் |
| 5. M. செல்வம் | — | கோவை |
| 6. எபிநேசர் | — | சென்னை |
| 7. S.ஜெயராஜ் | — | கோவை |
| 8. C. அருள்ராஜ் | — | சென்னை |
| 9. G. பாக்ய சம்பூர்ணம் | — | ஈரோடு |
| 10. K.S. மாணிக்கவாசகம் | — | திருச்சி |
| 11. Mrs.V.C. ருபியூலா | — | நாசரேத் |
| 12. R. வில்லியம் | — | விழுப்புரம் |
| 13. R. ராஜேஷ் | — | சென்னை |
| 14. S. சாந்தகுமாரி | — | நாசரேத் |
| 15. Mrs. ஜெயமணி | — | கடலூர் |
| 16. V.SS. பால்ராஜ் | — | மதுரை |
| 17. G. சாமுவேல் மோகன்தாஸ் | — | சென்னை |
| 18. S. சௌந்தர்ராஜன் | — | திருச்சி |
| 19. V. அழகேசன் | — | நாகை |
| 20. M. அமுதா | — | சேலம் |
| 21. ராபின் | — | சென்னை |
| 22. தியாகராஜன் | — | தூத்துக்குடி |
| 23. திலகம் | — | ஈரோடு |
| 24. துரைபாண்டியன் | — | திருச்சி |
| 25. மகிமைதாசன் | — | நீலகிரி |
| 26. ஜோதிமணி | — | ஈரோடு |
| 27. அற்புதம்மாள் | — | திருநெல்வேலி |
| 28. ஜெயபிருந்தா | — | ஈரோடு |
| 29. சாந்தி மரியாள் | — | திருப்பூர் |

# துவக்கமும், முடிவும்

Bro. பாண்டியன்

அன்பின் சகோதர சகோதரிகளுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துதலும் சமாதானமும் உண்டாவதாக. இந்தப் புதிய ஆண்டில் தேவன் உங்கள் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவாராக. ஒரு வேளை நீங்கள் எதிர்பார்த்தபடி இந்த ஆண்டின் துவக்கம் அமையாமல் போயிருக்கலாம். ஆனால் சோர்ந்து போகாதிருங்கள், தேவன் நம்மை தம்முடைய வார்த்தைகளால் தேற்றவும், உற்சாகப்படுத்தவும், பெலப்படுத்தவும் போதுமானவராக இருக்கின்றனர். ''உம்முடைய துவக்கம் அற்பமாய் இருந்தாலும் உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும். (யோபு 8:7)'' ஆம், தேவன் நம் முடிவை ஆசீர்வாதமாய் மாற்ற சித்தமுள்ளவராய் இருக்கிறார்.

மேற்கண்ட வசனப்பகுதி யோபைப்பார்த்து அவனுடைய சிநேகிதன் பில்தாத் சொன்னது. தனக்கு வந்த துன்பம் பெரியது என்று யோபு புலம்பியதைப் பார்த்து அவனுடைய சிநேகிதர் யோபு ஏதோ தவறு செய்திருப்பார். அதனால்தான் இப்படிப்பட்ட துன்பத்தை அனுபவிக்கிறார் என்று அவரைத் திட்டி தீர்த்தனர். அதையேதான் இவ்வுலகம் நமக்கும் செய்கிறது. கவலைப் படாதிருங்கள். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். தேவனோ இருதயத்தை பார்க்கிறவர். எனவேதான், யோபைப்பற்றி சிநேகிதர் அநேகக் குற்றச்சாட்டுகளை அடுக்கியும் தேவன் அவற்றை எல்லாம் புறந்தள்ளி யோபுவை இரண்டத்தனையாய் ஆசீர்வதித்தார் (யோபு 42:12,13) அதே தேவன் உங்களையும் ஆசீர்வதிப்பார் என்று விசுவாசியுங்கள்!

இஸ்ரவேலர் தங்கள் மீறுதலினாலும், அந்நிய தேவர்களை நாடினதாலும், தேவன் அவர்களை பாபிலோனியர் வசம் 70 வருடங்கள் அடிமைகளாக ஒப்புவித்தார். பிற்பாடு அவர்கள் திரும்பி வந்து செருபாபேல் மற்றும் யோசுவா தலைமையில் தேவாலயத்தைக் கட்ட ஆரம்பித்தார்கள். ஆனால், அது அற்ப காலத்திலேயே எதிரிகளால் தடை செய்யப்பட்டது. பின்பு 16

வருடங்கள் கழிந்த பின்னரே தேவாலயம் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டது. இதைக் குறித்து தேவன் முன்னமே தீர்க்க தரிசனமாக சொல்லி இருப்பதை பாருங்கள். ‘‘அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்? பூமியெங்கும் சுற்றிப்பார்க்கும் கர்த்தருடைய ஏழு கண்களும் செரூபாபேலின் கையில் இருக்கிற தூக்கு நூலை சந்தோஷமாய் பார்க்கிறது (சகரி 4:10). பிரியமானவர்களே நம்மால் செய்துமுடிக்க முடியாது என இந்த உலகம் கேலிபேசலாம். ஆனால் என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு என்று பவுலைப் போல தைரியம் கொள்வோம். அப்படிப்போலவே என் சபையைக் கட்டுவேன் என்ற கிறிஸ்துவின் வார்த்தையும் எருசலேமில் ஆரம்பித்து இன்றைக்கும் உலகளாவிய சபையாய் பரந்து விரிந்துள்ளது. இதையே இயேசுவானவர் மத் 13:31 கடுகு விதை உவமையில் முன் மொழிந்தார்.

ஞானி சாலமோன் சொல்வதைக் கேளுங்கள் ‘‘உன் அந்தியக் காலத்தில் நீ ஞானமுள்ளவனாய் இருக்க ஆலோசனைகளைக் கேட்டு, புத்திமதியை ஏற்றுக் கொள் (நீதி 19:20)’’வாலிபப் பிள்ளைகளுக்கு ஒரு வேளை சபை கூடுதல் சுமையாகக் கூடத் தோன்றலாம். ஆனால், நினைவில் வை! நீ தேவசமூகத்தில் கூடி வரும்போதுதான் உண்மையான ஞானத்தை சம்பாதிக்கிறாய். அதுவே உன் வயதான காலங்களில் உன்னைக் காக்கும். எப்படி இளவயதில் ஒழுங்காக வேலைக்குப் போனவர்கள், முதிர் வயதில் ‘‘பென்ஷன்’’ வாங்கி பயன் அடைகிறார்களோ அது போல ‘‘ஞானம்’’ நமக்கு உதவும். அதனால் தான் ‘‘நீ என்னத்தை சம்பாதித்தாலும் ஞானத்தையும், புத்தியையும் சம்பாதித்துக் கொள்’’ நீதி 4:5-7. என்கிறான் ஞானி சாலமோன். அதற்கு சபைக் கூடுதல் மிக, மிக அவசியம் என்பதை இன்றே உணர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் இந்த ஞானத்தை எப்படிப் பட்ட பெரிய கல்லூரிகளிலும் பெற்றுக்கொள்ள முடியாது. இந்த வருடத்தின் ஆரம்பத்திலுள்ள நாம் எக்காரணத்தைக் கொண்டும் ‘‘சபைக்கூடுதலை’’ விட்டு விடமாட்டேன் என்று ‘‘தீர்மானம்’’ செய்வோம்.

மேலும், பிரசங்கி சொல்வது ‘‘ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது. பெருமை யுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவனே உத்தமன்

(பிரச.7:8)'' நம் விசுவாச வாழ்க்கை ஞானஸ்நானத்தில் துவங்கும் போது சிலர் அதை அற்பமாகக் கூட எண்ணலாம். இவர்களெல்லாம் ஞானஸ்நானம் பெற்று என்ன ஆகிவிடப் போகிறது? என்றும் ஏளனம் பேசலாம். ஆனால் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது என்பதை மறந்துவிட வேண்டாம். பொறுமையினாலேயே நம் ஆத்துமாவை காத்துக்கொள்ள முடியும் (லூக் 21:19) தேவன் நமக்குப் அளித்திருக்கும் வாக்குத்தத் தங்கள் நம் வாழ்வில் நிறைவேறவும் நமக்கு பொறுமை தேவை (எபி10:36) அதினாலே நாம் தேவனுக்கு பிரியமானவர்களாக இருக்க முடியும். பின்வாங்கிப் போனால் அவனிடம் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். காரியத்தின் கடைத்தொகை அதாவது முடிவை கேட்போமானால் ''நாம் தேவனுக்குப் பயந்து அவருடையக் கற்பனைகளை கைக் கொள்வதே அனைவரின் கடமையாய்'' இருக்கிறது. தேவபயமே நம்மை இரட்சித்து ஆசீர்வதிக்கும். நாம் நன்றாயிருக்க தேவனுக்கு பயந்து வாழுவோம் (பிர8:12) (சங்115:13-15) தேவ ஆசீர் நம் அனைவருக்கும் குறைவில்லாமல் உண்டாவதாக. ஆமென். ★

## நாளும், நடப்பும்

★ நதிநீர் பிரச்சனைகளில் விவசாயிகள் நலன்காக்க சட்டரீதியான நடவடிக்கை ஆளுநர்.

★ பழங்குடியினர் வாழும் பகுதிகளில் பள்ளிகள் தொடங்க நிதியுதவி.

★ கஜா புயல் நிவாரணம் மத்திய அரசிடமிருந்து ரூ.900 கோடி மட்டுமே நிதி கிடைத்துள்ளது.

★ கள்ளக்குறிச்சி புதிய மாவட்டமாக அறிவிப்பு.

★ ஆஸ்திரேலியா மண்ணில் இந்தியா வரலாற்றுச் சாதனை.

★ இந்திய வரலாற்றில் இராணுவ அணி வகுப்பிற்கு ஒரு பெண் தலைமை நடத்தி செல்கிறார்.

# கிறிஸ்து என்னும் மார்க்கம்

Bro.ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார்

## ஓய்வு நாளும், வாரத்தின் முதல் நாளும்

1. அன்பானவர்களே! இன்றைக்கு அநேகர் வேதாகமத்தின் படி ஓய்வு நாளுக்கும், வாரத்தின் முதல் நாளுக்கும் உள்ள வித்தியாசம் தெரியாமல், தாங்களே குழப்பமடை கிறதையும் மற்றவர்களைக் குழப்கிறதையும் பார்க்கிறோம்.
2. இந்த குழப்பத்தினால் ஞாயிற்றுக் கிழமையை வேதத்தின்படி ஓய்வு நாள் என்று இன்றைக்கும் அநேகர் உறுதியாக நம்புகிறார்கள்.
3. வேத வசனங்களின்படி ஆய்வு செய்து ஓய்வு நாளையும் வாரத்தின் முதல் நாளையும் இன்றைக்கு எந்தெந்த நாட்கள் என்று தெரிந்து கொண்டால், இதைப்பற்றிய குழப்பம் தெளிவடைவதற்கு வாய்ப்பு உண்டாகும்.
4. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் மற்றும் அதற்கு சம்மந்தப்பட்ட அனைத்தையும் சிருஷ்டித்த பின்பு ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்று வேதம் கூறுகிறது.

இவ்விதமாக வானமும் பூமியும், அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன. தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளை யெல்லாம் முடித்த பின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளை யெல்லாம் முடித்த பின்பு அதிலே ஓய்ந்திருந்த படியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்,'' ஆதியாகமம் 2:1–3.

### *I.* இந்த ஓய்வு நாள் கட்டளையை தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு கொடுத்தார்

''ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமரனானாலும், உன் குமாரத்தி யானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள

எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தப்படுத்தினார்,'' (யாத்திராகமம் 20:8-11).

A. ஆதியாகமம் புத்தகத்தில் நாம் படிக்கும்போது, முற்பிதாக்களான ஆதாம், நோவா, ஆபிகராம், ஈசாக்கு, யாக்கோபு போன்றவர்களுக்கு இந்த ஓய்வு நாளைப் பற்றின கட்டளையை தேவன் கொடுத்தார் என்பதற்கான சான்று காணப்படவில்லை.

'நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே நம்மோட உடன்படிக்கை பண்ணினார். அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கின்ற நம்மெல்லாரோடும் பண்ணினார். கர்த்தர் மலையிலே அக்கினியின் நடுவிலிருந்து முகமுக மாய் உங்களோடே பேசினார்,'' (உபாகமம்; 5:2-4).

B. மேற்கண்ட வசனத்தில் நாம் கவனிக்கும்போது, மோசே இந்த வாக்கியங்களை இஸ்ரவேல் மக்களிடத்திலே பேசுகிறார். அவர்கள் அனைவரும் இப்பொழுது யோர்தானுக்குக் கிழக்கே சமமான வெளியிலே இருந்தார்கள்.

''சேயீர் மலைவழியாய் ஓரேபுக்குப் பதினொரு நாள் பிரயாண தூரத்திலுள்ள காதேஸ்பர்னேயாவிலிருந்து, சூப்புக்கு எதிராகவும், பாரானுக்கும் தோப்பேலுக்கும் லாபானுக்கும் ஆஸரேத்துக்கும் திசாகாபுக்கும் நடுவாகவும் இருக்கிற யோர்தானுக்கு இக்கரையான வனாந்திரத்தின் சமமான வெளியிலே வந்தபோது, மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் நோக்கிச் சொன்ன வசனங்களாவன,'' உபாகமம் 1:1,2.

C. அந்த சமயத்தில் மோசே: இந்த உடன்படிக்கையை கர்த்தர் நம்முடைய (இஸ்ரவேலர்களுடைய) பிதாக்களுடன் பண்ணவில்லை என்று திட்டமாகக் கூறுகிறார்.

D. இதே போல இஸ்ரவேலர்கள் எகிப்திலே அடிமைகாக வாழ்ந்த காலங்களிலும் அவர்கள் ஓய்வுநாளை அனு சரித்தார்கள் என்பதற்காக வேதத்தில் பதிவுகள் இல்லை.

E. தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து சிவந்த சமுத்திரம் வழியாக மீட்டுக் கொண்டுவந்து, ஓரேபிலே (சீனாய் மலையிலே) அவர்களுக்கு முதலாவது 10 கட்டளைகளைக் கொடுத்தபோது அதில் 4வது கட்டளையாக ஓய்வு நாளில் ஓய்ந்திருக்க வேண்டும் என்கிற கட்டளையைக் கொடுத்தார், உபாகமம் 5:12-14.

F. ஓய்வு நாளை ஆசரிப்பதற்கான ஒரு நோக்கத்தையும் தேவன் இஸ்ரவேல் மக்களுக்குச் சொல்லியிருக்கிறார், அது என்னவென்றால்:

‘நீ எகிப்து தேசத்தில் அடிமையாயிருந்தாய் என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புறப்படப் பண்ணினார் என்றும் **நினைப்பாயாக;** ஆகையால் ஓய்வுநாளை ஆசரிக்க உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டார்,’’ (உபாகமம் 5:15).

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து புறப்படப் பண்ணினார் என்பதை இஸ்ரவேலர்கள் அந்நாளில் நினைவு கூர வேண்டும்.

G. இஸ்ரவேல் மக்கள் ஓய்வு நாளில் வேலை செய்யக் கூடாது. அதிகமான தூரம் பிரயாணம் செல்லக் கூடாது, அதற்கு பதிலாக தேவனுடைய செயல்களை நினைவு கூர வேண்டும்.

‘‘ஆறு நாளும் வேலை செய்ய வேண்டும்; ஏழாம் நாள் பரிசுத்த சபைகூடுதலான ஓய்வு நாள், அதில் ஒரு வேலையும் செய்ய வேண்டாம்; அது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக,’’ (லேவியராகமம் 23:3)

‘‘அப்பொழுது அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய் ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரத்திலிருக்கிற ஒலிவமலை எனப்பட்ட மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள்,’’ அப்போஸ்தலர் 1:12

(குறிப்பு : இப்பொழுது google maps – ல் இந்த தூரத்தை தேடினால் நடைபயணமாக சென்றால், 4.4 கிலோமீட்டரும் வாகனத்தில் சென்றால் 6.6 கிலோ மீட்டரும் என்று நமக்கு தகவல் கொடுக்கிறது.)

H. இந்த ஓய்வு நாளிலே ஆத்துமாக்களைக் கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுத்த வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார்.

‘‘உங்களுக்கு அது விசேஷித்த ஓய்வு நாள்; அதிலே உங்கள் ஆத்மாக்களைத் தாழ்மைப்படுத்தக் கடவீர்கள்; இது நித்திய கட்டளை,’’ லேவியராகமம் 16:31.

*I.* ஓய்வு நாள் பிரமாணத்தை மீறுகிறவர்கள் கொலை செய்யப்பட வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார், (யாத்திராகமம் 31:15;35:2).

‘‘இஸ்ரவேல் புத்திரர் வனாந்திரத்தில் இருக்கையில், ஓய்வுநாளில் விறகுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டுபிடித்தார்கள்.... கர்த்தர் மோசேயை நோக்கி: அந்த மனிதன் நிச்சயமாய்க் கொலை செய்யப்பட வேண்டும்; சபையார் எல்லாரும் கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, அவனைப் பாளயத்திற்குப் புறம்பே கொண்டு போய்க் கல்லெறிந்தார்கள்; அவன் செத்தான், (எண்ணாகமம் 15:32, 35–36.) ★